# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*************

முறையீட்டு மனு எண்: 869/2016/பேரு I

ஆணை எண்: 201/2017

நாள்: 10/08/2017

திரு. என். எஸ். கிருஷ்ணன்,
65, காந்தி ரோடு,
ஆலங்காட்டு வலசு,
மொடக்குறிச்சி,
ஈரோடு மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்

1. திருமதி பார்த்தி,
   முன்னாள் செயல் அலுவலர்,
   மொடக்குறிச்சி பேரூராட்சி.
2. திரு. கே. பாலகுமார்,
   முன்னாள் வார்டு உறுப்பினர்,
   மொடக்குறிச்சி பேரூராட்சி,
   ஈரோடு மாவட்டம். — எதிர் மனுதாரர்கள்

## ஆணை

திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளவாறு ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சியில் தென்னை மர ஏலம் எடுத்தது திரு. பாலகுமார் என்பவரின் தந்தை திரு. கைலாசம் அல்ல எனவும் திரு. ரங்கசாமி என்பவரால் மேற்படி ஏலம் எடுக்கப்பட்டதாகவும், திரு. கைலாசம் என்பவர் பேரூராட்சியின் ஒப்பந்தக்காரராக இல்லாத நிலையில் இழப்பீட்டுத் தொகையினை வசூலிக்க இயலாது என மொடக்குறிச்சி பேரூராட்சியின் செயல் அலுவலரது 21.7.2017 நாளிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரரின் புகாரில்/வாக்குமூலத்தில் திரு. கைலாசம் என்பவர்தான் ஏலதாரர் என தெரிவித்த நிலையில் மேற்படி மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரின் 18.09.2015–ம்

தேதிய கடிதத்தில் மேற்படி ஏலம் எடுத்தவரின் பெயர் விவரங்களை குறிப்பிடாமல் புகார் மனுதாரர் காழ்ப்புணர்ச்சியில் புகார் கொடுத்துள்ளதாக தெரிவித்ததின் அடிப்படையில் ஏலதாரர் **திரு. கைலாசம் எனக் குறிப்பிட்டு ஏற்கனவே பேரூராட்சிக்கு ஏற்பட்ட இழப்பீடுகளை அவரிடம் வசூலிக்கும் வண்ணம் இம்முறைமன்ற நடுவத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால்,** தற்போது **மொடக்குறிச்சி செயல் அலுவலர்,** தனது கடித எண்.175/2015/நாள்:21.07.2017ல் திரு. கைலாசம் என்பவர் தென்னை மர **ஏலதாரர் இல்லை எனவும்** ஏலம் எடுத்தவர் **திரு. ரங்கசாமி எனவும் திரு. கைலாசம் என்பவர் பேரூராட்சியின் ஒப்பந்தக்காராக இல்லாத நிலையில்** இழப்பீட்டுத் தொகையினை வசூலிக்க இயலாது என தெரிவித்திருப்பது ஏற்புடையதாக இல்லை. மேலும், இத்தகைய பதில் பொறுப்பற்ற தன்மையையே சுட்டிக் காட்டுகிறது. எனவே, இழப்பீட்டிற்கு **பொறுப்பான ஒப்பந்ததாரர் எவரோ அவரிடம் இருந்து குடிநீர் கட்டணம், மின் செலவு மற்றும் பைப்லைன் போடுவதற்கு சாலையில் ஏற்பட்ட பழுது ஆகியவற்றினை கணக்கிட்டு** தொகையினை வசூலித்து இழப்பீடு சரி செய்தமைக்கான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு பேரூராட்சி செயல் அலுவலர், மொடக்குறிச்சி அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 10 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

21/8/17

16.8.17

பெறுநர்
செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

நகல்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு. } தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்